www.tamilarangam.net

எமது வெளியேற்றம்

**அராஜகத்துக்கு எதிரானதே தவிர**

**விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானதல்ல**

---

. , . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . அவர்களின் முழுமையான உடன் கவனத்திற்கு,

தமிழீழத்தின் குரல் கலையகத்திலிருந்து வெளியேறிய தோழர்கள் எழுதிக் கொள்வது.

ஸ்ரீலங்கா சிங்கள இனவாத அரசு தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மறுத்தபோது தமிழ் மக்கள் தமது தன்னியல்பான உரிமை மறுப்புக்கு எதிரான போராட்டத்தை அரசிற்குள்ளேயே இருந்துக் கொண்டு நடாத்தினர். அரசிற்குள்ளேயே அரசின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தமிழர்கள் நடத்திய அத்தகைய போராட்டங்களைக் [illegible] கூட அரசு தனது அரசு இயந்திரங்களைக் கொண்டு நியாயமான போராட்டங்களை கடுமையாக அடக்கி ஒடுக்கியது. இந்நிலையில்தான் தமிழ் மக்களின் தமது மறுக்கப்பட்ட அரசியல் உரிமைகளையும் தமது நியாயமான உரிமை மறுப்புக்கு எதிரான போராட்டங்களையும் ஆளும் வர்க்கம் அடக்கி ஒடுக்குவதைக் கண்டு "தமிழ் மக்களின்" தமது அடிப்படை அரசியல் உரிமைகளை ஆளும் வர்க்கத்திடமிருந்து ஆயுதத்தினூடாக மட்டும் தான் பெறமுடியும் என்ற நிலை வளர்ச்சிக்கு வந்தனர். இதன் அடிப்படையில் தான் ஆயுதம் ஏந்திய போராட்டத்தினூடாக தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்கும் நோக்குடன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (பிளாட்) கட்டப்பட்டது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலுள்ள ஒவ்வொரு தோழனும், முழுமையான அரசியல் சுதந்திரத்துடன் பொது எதிரிக்கெதிரான போராட்டத்தை முழுமையான தியாக மனப்பான்மையுடன் முன்னோக்கிச் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய இக்காலகட்டத்தில் ஆனால், இன்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலுள்ள தோழர்கள் தமது தனி மனித அரசியல் உரிமைகள்கூட கழக அராஜக வாதத் தலைமையினால் அடக்கப்பட்ட நிலையில்

ஒவ்வொரு தோழனும்:-

* மக்களின் விடுதலையை வேண்டி அல்ல
* தமது தனிமனித அரசியல் உரிமையை வேண்டி

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அராஜக வாதத்தின் முன் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கின்றான். (இங்கு தனிமனிதர் அணு அணுவாக சாவது என்பதன் பொருள் " தனி மனிதனுக்கான அரசியல் உரிமைகளை தனி மனிதன் அராஜகத்தினால் படிப்படியாக இழந்து செல்கின்றான் என்பதே ஆகும்")

பேச்சுரிமை, எழுத்துரிமை, கல்வியுரிமை வேலைவாய்ப்பு உரிமை போன்ற எமது அடிப்படை அரசியல் உரிமைகளை இழந்த நிலையில் அதனை வேண்டிப் போராடப் புறப்பட்ட நாம் இன்றும் கழகத்துக்குள் வந்தும் மூன்று வருடமாகியும் இழந்த அரசியல் உரிமைகளை ஒருபடிமான வளர்ச்சியிலேனும் வென்றெடுக்கவில்லை என்கின்ற அதே வேளையில் நாம் கழகத்துக்குள் வருகின்ற போது எமக்கிருந்த ஓரளவு அரசியல் உரிமைகளையும் கழகத்தின் இந்த அராஜகவாதத் தலைமை படிப்படியாக நசுக்கி எங்களை இன்று வெறும் நடைப்பிணங்களாக பார்க்கத் தொடங்கியதிலிருந்து பாவிக்கத் தொடங்கி விட்ட இவ்வேளையில் இனியும் நாம் எமது அடிப்படை அரசியல் உரிமைகளைப் பெற எமது உயிரையும் பணயம் வைத்துப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனவே, உச்சக்கட்ட அராஜகத்துக்குள் இருந்துக் கொண்டு அராஜகத்துக்கு எதிரான முழுமையான போராட்டத்தை நடத்துவது என்பது சாத்தியமற்றது" "இந்நிலையில் எமது வெளியேற்றம் தவிர்க்க - முடியாததாகின்றது".

குறிப்பாக பார்க்கும்போது பிற்போக்கான குழு நலன்களுக்கான தன்னை மக்களுக்காக போராடுவதாகக் கூறிக் கொண்டு தன்னிட மக்களையே அழித்துக் கொண்டிருப்பது தான் இந்த கழக அராஜக வாதத் தலைமையாகும்.

நடைபெற இருக்கும் மகாநாடு ஒரு ஜனநாயக பூர்வமான சூழலில் நடாத்தப்பெற்று அராஜகத்துக்கு எதிரான [illegible] பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்கின்ற நம்பிக்கையை தகர்க்கின்ற சூழலேயே நாம் இங்கு காணக் கூடியதாக இருக்கின்றது. அராஜக வாதிகளே இம்மகா நாட்டின் மூலம் தங்களை மறு நிர்மாணம் செய்துக் கொள்ள போகின்றார்கள். இச்சூழலில் தங்கள் கருத்துக்களை வெளியிட வேணும். இந்த மகாநாட்டில் நாம் பங்கு கொள்வது என்பது அராஜகத்தின் மறு நிர்வாணத்திற்கே பயன்படும் என்கிற வகையில் மகாநாட்டுக்கு முன்னதாகவே எங்கள் வெளியேற்றம் தவிர்க்க முடியாததாகின்ற

.....3

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கழகத்தின் இந்த அராஜக வாதத் தலைமையின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் சதி நடவடிக்கைகளிலிருந்து பிரித்துப் பார்க்க கூடியதொன்றல்ல என்பது உண்மை.

தமிழீழத்தில் குரலிலிருந்து வெளியேறிய தோழர்களாகிய நாங்கள் இந்த அராஜகவாத தலைமையின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் ஆரம்பத்திலிருந்து எமது எதிர்ப்பை சில காலங்களில் வெளிப்படையாகவும் சில காலங்களில் தந்திரரோபாயக்கருதியும் மிகவும் சூசகமாகவும் வெளிப்படுத்தி வந்துள்ளோம். அவ்வாறு இருந்தும் பல சந்தர்ப்பங்களில் நாம் அராஜக வாதத்தின் கருத்தியல்களால் நசுக்கப்பட்டும் கரங்களால் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகியும் உள்ளோம் என்பது நீங்கள் புரியாத ஒன்றான இருந்தாலும் அறியாத ஒன்றல்ல.

கழகத்துக்கும் நாம் கடுமையான போராட்டத்துக்கும் மத்தியிலும் கழகத்துக்குள் இருந்துக் கொண்டு நல்ல சக்திகளை ஒன்றிணையத்து அராஜகத்திற்கெதிரான குரல்களை வெறும் வாயளவில் அல்லாமல் நடைமுறையில் முன்னுக்கு கொண்டு வந்து கழகத்தை நல்ல பாதைக்குக் கொண்டு செல்வதில் எமது பங்களிப்பைச் செய்ய விரும்பினோம்.

ஆனால், கழகத்துக்குள் மருந்துக் கூட (சிறிதளவேனும்கூட) உட்கட்சி ஜனநாயகம் என்பது மறுக்கப்பட்டு இருந்ததனால் கழகத்துக்குள்ளிருந்த ஜனநாயக வாதிகள் கூட ர் உதிரிகளாக தொடர்ந்தும் வெளியேறிக் கொண்டிருக்கும் இந்நிலையில் கழகத்துக்குள் (அமைப்பு) தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டம் பற்றி சரியான கருத்தை கூறமுடியாவிட்டாலும்.

* பெருமளவில் வெளியேறிவிட்ட – வெளியேறிக் கொண்டிருக்கும் ஜனநாயக சக்திகளின் பார்வைக்கும்.
* கழகத்திற்கு வெளியில் இருந்துக் கொண்டும், அராஜகத்துக்கு எதிராக தொடர்ச்சியாக குரல்களை எழுப்பிக் கொண்டிருக்கும் அராஜகத்திற்கு எதிரான சக்திகளின் பார்வைக்கும்.
* எமது வெளியேற்றத்தினை எதிர்பார்த்து உள்ளுக்குள் வெளியேறத் துடிக்கும் (வெளிப்பட்ட சக்திகள், வெளிப்படாத சக்திகள் இரண்டும்) சக்திகளின் பார்வைக்கும்.

.......4

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எமது வெளியேற்றம் என்பது அத்தியாவசியமாகிறது. இதன் பார்வையில் " இந்த நிலையில் எமது வெளியேற்றம் தவிர்க்க முடியாததாகின்றது".

எனவே, எமது நியாயமான வெளியேற்றத்துக்கு நீங்கள் எந்தப் பக்கம் ? .

மேற்காட்டியதிலிருந்து நீங்கள் கண்டுக் கொள்ள வேண்டியது தமிழீழத்தின் குரலிலிருந்து வெளியேறிய தோழர்களாகிய நாங்கள் எந்தவித தனிமனித முரண்பாடுகளுக்காகவோ அல்லது அரசியல் அணுகுமுறையற்ற எந்தவித முரண்பாடுகளுக்காகவோ வெளியேறவில்லை என்பதே ஆகும்.

எமது வெளியேற்றத்தின் அடிப்படை என்பதே

* அராஜகத்திற்கெதிரானது
* அராஜகத்தலைமைக்கு எதிரானது
* இரசியல் அராஜகத்திற்கு எதிரானது.
* எமது வெளியேற்றம் ஒரு ஆழ்ந்த அரசியல்போக்கு உள்ளதாக இல்லாவிட்டாலும் நிட்சயம் எமது வெளியேற்றம் ஓர் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது உண்மை.
* இறுதியாக நாங்கள் எமது வெளியேற்றத்தின் பின் அடுத்தக் கட்ட நடவடிக்கைகளைப் பற்றி சரியாக தீர்மானிக்காவிட்டாலும் எமது அடுத்த கட்ட வேலைகளை தீர்மானிப்பதற்கு முதன்மை வகிக்கக்கூடிய சக்திகளை சரியாக எம்மால் இனங்காண முடிகிறது.

அ. தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்துக்குள் உள்ள நல்ல சக்திகள் (அகச்சூழல்)

ஆ. தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்துக்கு வெளியேயுள்ள நல்ல சக்திகள் (புறச்சூழல்).

* கொள்கை விடுதலை
* தோழர்கள் விடுதலை
* அமைப்பு விடுதலை
* இவை மூன்றும் * சரியான ஒரு நிலையை விஞ்ஞான பூர்வமாக பெற்றிருக்கின்ற போதுதான் மக்கள் விடுதலை என்பது சாத்தியமாகும்.

.....5

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முக்கிய குறிப்பு :-

கலையக சொத்துக்கள் யாவும் பூட்டப்பட்டு சீல் [illegible] வைக்கப்பட்டு சாவிகளும் கலையக கணக்கு விபரப்புத்தகமும், கலையக பொருட்களின் இருப்பதிவுகளும் (புகைப்பட பிரிவு, ஒலிப்பதிவு) கீழ்குறிப்பிடப்படும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. (தோழர் கோவைகள் அறை மேசை லாச்சியில் உள்ளது)

பொறுப்பாளர்கள் நேரில் சென்று எடுத்துக் கொள்ளவும்.

வெளியேறிய தோழர்களின் பெயர்கள் :-

1.

2.

3.

4.

5.

6.

7.

8.

பின் இணைப்பு :-

சீல் வைக்கப்பட்ட கலையக சொத்துக்களின் பட்டியலும் இறுதி கணக்கறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்